**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 59/2021**

**Deposition of P.W.2- சுனில்குமார்**

**Dated:** 26.**09.2025**

**<u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மனுதாரர் எனக்கு தெரிந்த நபர். 23.07.2018ம் தேதி விபத்து நடைபெற்றது. நான் சிராயங்குழியிலிருந்து – தக்கலை நோக்கி சென்று கொண்டிருந்தேன். பேரூந்து நாகர்கோவிலிருந்து – மார்த்தாண்டம் நோக்கி வந்து கொண்டிருந்தது. ஆட்டோவின் தவறுதலாக விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல ஆட்டோ நாகர்கோவில் – திருவனந்தபுரம் சாலையை திடீரென குறுக்கே கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆட்டோவில் ஓட்டுனரோடு சேர்த்து 4 பேர் பயணம் செய்தார்கள். விபத்துதொடர்பாக நான் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்க்காமல் மனுதாரரின் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.